**தலைப்பு 211 – அரசாங்க அச்சகத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 211 – அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதி அரசாங்க அச்சகருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 2,002.00 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,841.83 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 160.17 மில்லியன் அதாவது 8 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,904.00 | 1,752.15 | 151.85 | 7.98 |
| மூலதனம் | 98.00 | 89.68 | 8.32 | 8.49 |
| மொத்தம் | 2,002.00 | 1,841.83 | 160.17 | 8.00 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக 20-03-02-05 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 500.00 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 519.47 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 104 சதவீதமாக இருந்தது. விலை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 20-03-02-05 | 500.00 | 519.47 | 19.47 | 3.89 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 50.00 | 49.99 | 45.00 | 51.26 | 255.00 | 203.19 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0104/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 17.72 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ் வரும் 03 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 71.92 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0035/000 | 69.22 |
| 6000/0000/00/0018/0003/000 | 0.85 |
| 6000/0000/00/0002/0050/000 | 1.85 |
| | 71.92 |

**2.6 கணக்காய்வு அவதானிப்புகள்**

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அரசாங்க அச்சகத் திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 211(1) |
| (ஆ) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

### 3.2 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 2,807,172 கூட்டுத்தொகையான 25 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 வருமானக் கணக்கு

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டு இலக்கமொன்றின் வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற் செயற்பொறுப்புக்கள் என்பன கையளிக்கப்பட்டிருந்தன. 20-03-02-05 ஆம் இலக்க வருமானக் குறிப்பீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 558.34 மில்லியன் நிலுவையாக இருந்தது. அந்த நிலுவையில் 1989 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான 21 வருட காலப்பகுதியிலிருந்து ரூபா 202.93 மில்லியன் அறவிடப்படாது காணப்பட்டது. மீளாய்வாண்டின் போதும் எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தால் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அச்சிடல் பணிகளுக்காக அறவிடப்பட வேண்டிய கூட்டுமொத்தமான கடன் மீதி ரூபா 10,174,643 ஆகும். அந்த மீதியில் ரூபா 931,096 கூட்டுத்தொகையான கடன் மீதி 12 முதல் 24 வருடங்கள் வரையிலான காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. அவ்வாறே 2014 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 9,243,546 தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

21101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மரணமடைந்த, வேலை நீக்கஞ் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் சேவையிலிருந்து விலகிய 8 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1.77 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. அந்த ஆதனக் கடன் மீதியை 10 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 3.11 மில்லியன் தொகை இடர்கடன் தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/2009(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆவது பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக திணைக்களம் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வருடமொன்றிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 06 தடவைகள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது 04 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.5.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2017 யூலை 11 ஆந் திகதி வரையிலும் பாராளமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(i) புத்தகங்களைக் கட்டும் பணிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,250,000 கூட்டுப் பெறுமதியான 05 அந்த இயந்திரங்களிலிருந்து மேற்கொள்ளக்கூடிய அச்சிடல் வேலை இல்லாதிருந்தமையால் 13 வருட காலமாக பயன்பாடின்றிக் காணப்பட்டது.

(ii) பெறுமதி சரியாக தீர்மானிக்க முடியாத 36 இயந்திரங்களின் பொறிகளை பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தாமை, தொழில்நுட்ப ரீதியில் காலாவதியாகியமை போன்ற காரணங்களால் 06 மாதம் முதல் 10 வருடங்கள் வரையிலான காலத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக அச்சிடல் செயற்பாடுகள் தொடர்பாக பயன்படுத்தப்படாத இயந்திர உபகரணங்களைக் கண்டறிவதற்கு அச்சகர் நியமித்திருந்த குழுவின் 2014 நவம்பர் 17 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் செயற்பாடற்ற 20 இயந்திரங்கள் இனங்காணப்பட்டிருந்தன.

(iii) மாதிரிப் படிவங்கள் களஞ்சியத்தால் எந்த நிறுவனத்திற்கு எவ்வளவு அளவில் மாதிரிப் படிவம் மற்றும் புத்தகங்கள் விநியோகிக்கப்படுகின்றது என்பதை செயற்திறனான முறையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியுமான கணனி முறையை அமுல்படுத்துவதற்குத் தேவையான பயற்சி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமையினால் விளைவற்றுக் காணப்பட்டது.

(iv) ரூபா 12 மில்லியன் அளவிலான நிதி ரீதியிலான பெறுமதியுடைய Legistative Enactments of Ceylon, New Law Reports மற்றும் Voice from Ancient Sri Lanka என்ற மூன்று வகையான புத்தகங்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை பயன்படுத்தாமல் பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(v) திணைக்களத்தின் வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 2,951,179 தொகையான சுயமாக செயற்படும் வாயிற்கதவு முறைமை இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் அந்த அறிக்கை 2017 யூன் 06 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 1989 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

**3.7 செயலாற்றல்**

**பாடசாலை பாடவிதானப் புத்தகங்கள் அச்சிடல்**

(i) கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கின்ற பாடசாலை பாடவிதானப் புத்தகங்களை அச்சிடும் கட்டளை குறைவடைந்தமையினால் அந்த நிலைமையை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்கான திட்டமுறைமையொன்றைத் தயாரித்து உரிய சரியான திட்டத்தைத் தயாரிக்குமாறு 2009 செப்தெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவினால் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்குரிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அச்சிடுவதற்காக திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற புத்தகங்களின் வகைகளின் அளவு 01 முதல் 06 இற்கிடையிலான வீச்சில் காணப்பட்டதுடன் அதில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 ஆம் ஆண்டிற்காக பாடவிதானப் புத்தகங்களை அச்சிடுவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலிருந்து பாடவிதானப் புத்தகங்களில் 04 வகைகளில் 03 வகைகளும் தாமதமாக அச்சிடப்பட்டிருந்தன. தாமதக் காலம் 01 நாள் முதல் 31 நாட்கள் வரையிலான காலமாக இருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான பாடசாலை பாடவிதானப் புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கைகளும் 03 நாட்கள் முதல் 115 நாட்கள் வரையிலான காலம் தாமதமடைந்திருந்தது. அவ்வாறு தாமதித்து அச்சிடப்பட்ட

பாடவிதானப் புத்தகங்களில் இரண்டு வகைகளுக்காக 2017 மே 30 இல் உள்ளவாறு தண்டப்பணம் மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 1,245,367 தொகை கல்வி வெளியீட்டு திணைக்களத்தால் அறவிடப்பட்டிருந்தது.

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்கம் அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கட்டு நிதி கோரும் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அந்த திட்டத்தை தயாரிப்பதற்காக திணைக்களத்தின் 34 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் 2016 திசெம்பர் 17 மற்றும் 18 ஆகிய இரண்டு தினங்களிலும் றன்மிஹிதென்ன தேசிய டெலி சினிமா பூங்காவில் நடாத்தப்பட்ட செயலமர்விற்கு ரூபா 260,000 இற்கு அண்ணளவான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடமைகளுக்குரிய வேலை ஆய்வின் மூலம் திணைக்களத்தில் அச்சிடல் பணி உதவியாளர் பதவிக்கு உரிய கடமைகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அச்சிடல் பணி உதவியாளர் பதவியில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்கள் திணைக்களத்தின் பல்வேறு பணிகளை நிறைவேற்றி அதற்காக துண்டுக் கூலி அடிப்படையில் பல்வேறு கொடுப்பனவுகளைப் பெற்றிருந்தனர். 12 ஊழியர்களினால் அவ்வாறு துண்டுக்கூலி அடிப்படையில் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் ரூபா 138,907 தொகை பெறப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2014 மார்ச் 24 ஆந் திகதிய EST/8/ALLOW/03/969/22 ஆம் இலக்க தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், 2014 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு முன் அங்கீகாரம் பெறப்படாமல் கூட்டுமொத்தமாக ரூபா 1,298,534,052 தொகை ஏனைய படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.10 முகாமைத்துவ நலிவுகள்

(அ) அச்சிடல் கட்டளை கிடைத்த சந்தர்ப்பம் முதல் அந்த அச்சிடல் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் சந்தர்ப்பம் வரை திணைக்களத்தில் அமுல்படுத்தப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைமையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அச்சிடல் கட்டளை கையேற்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்தக் கட்டளை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியை அடிப்படையாக கவனத்தில் கொண்டு பூர்த்தி செய்தல் தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கிடைக்கின்ற அச்சிடல் கட்டளைகளை பூர்த்தி செய்வதற்கு பங்களிக்கின்ற திணைக்களத்தின் பிரிவுகளுக்கிடையே சிறந்த தொடர்பும் செயற்பாடுகளும் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. கட்டளை கையேற்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து பூர்த்தி செய்யும் வரையிலும், ஒட்டுமொத்த செயற்பாடுகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் மூலம் மேற்பார்வையொன்று இடம்பெறாதிருந்தமை அச்சிடல் கட்டளை தாமதமாக கையளிக்கப்பட்டமையிலிருந்து புலனாகியது.

(iii) அச்சிடல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு அச்சிடல் கட்டளை கையளிக்கப்பட வேண்டிய திகதி தொடர்பாக முன் இணக்கப்பாடொன்று சேவைப் பங்களிப்பு நிறுவனங்களுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணனி தட்டெழுத்தாளர் பிரிவில் உத்தியோகத்தர்களின் வேலை மேற்பார்வை கட்டுப்பாட்டு முறைமையின் நலிவுகளினால் 1953/22, 1991/42, 1992/03 மற்றும் 1964/17 ஆம் இலக்கங்களுடைய அதிவிஷேட வர்த்தமானியின் பக்கம் 07, பக்கம் 10, பக்கம் 08 மற்றும் பக்கம் 12 என தட்டச்சு இடுவதற்காக மணித்தியாலம் 42.5, மணித்தியாலம் 116.75, மணித்தியாலம் 57.5 மற்றும் மணித்தியாலம் 115.5 என காலமொன்று உத்தியோகத்தர்கள் எடுத்திருந்ததாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2009 செப்தெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவினால் ஊழியர் ஊக்குவிப்புப் படி செலுத்துதல் தொடர்பான திட்டமுறைமையொன்றைத் தயாரிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு திகதியான 2017 யூன் 19 ஆந் திகதி வரையிலும், அப்பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1981 திசெம்பர் 16 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் சில வேலைப் பகுதிகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவிற்குப் பதிலாக வேலைப் பகுதியின் படியான கொடுப்பனவுத் திட்டமொன்றிற்காக (Piece Rate) அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த திட்டத்தின் கீழ் அமுல்படுத்தக்கூடிய குறித்த வேலைப் பகுதி உள்ளடக்கப்பட்டிருந்ததா என திறைசேரியினால் அரசாங்க அச்சகருடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 35 வருடங்களை விஞ்சியிருந்த அந்த குறித்த வேலைப்பகுதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பயிற்சி தேவைகளை இனங்கண்டு மீளாய்வாண்டிற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை அச்சிடல் நிறுவகத்தில் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கு திணைக்களத்தின் பதவியணியினைத் தெரிவு செய்யும் போது சரியான அடிப்படையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.11 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 20 | 17 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 03 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1234 | 638 | 596 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 694 | 544 | 150 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | - | 10 | - | 10 |
| | | ------------ | ------------ | ------------- | ------------- |
| | மொத்தம் | 1973 | 1215 | 768 | 10 |
| | | ======= | ======= | ======= | ======= |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அச்சிடல் துறை புதிய தொழில்நுட்பத்துடன் துரிதமாக அபிவிருத்தியடையும் துறையாக இருந்தமையால், அச்சிடல் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் நியமிக்கப்பட வேண்டிய பதவியணியினர் சரியான வேலை ஆய்வொன்றினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் உதவிச் செயலாளர் (தொழிலாளர் தொடர்பு) பதவியில் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கனிஷ்ட ஊழியரொருவர் 2015 மே 15 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார்.